## அக்டோபர் – 10 – செவ்வாய்

### புனித பிரான்சிஸ் ஜோர்ஜியா

**ஆண்டவரே! ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்: திபா. 130:1**

### முதல் வாசகம் : யோனா 3 : 1 - 10

இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர்,"நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியைஅங்குள்ளோருக்கு அறிவி" என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக்கடக்க மூன்றுநாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார்.நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்.இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்காரந்தான்.மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது.மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும் தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும்.இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார் அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது."கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

**பதில்பாடல் :** நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டால்
யார்தான் நிலைத்து நிற்கமுடியும்

### நற்செய்தி : லூக்கா 10 : 38 - 42

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களோடு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா.அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும்" என்றார்.ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள் அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார்

**தியானம்:** அன்பின் ஆண்டவர் தமது வார்த்தைகளில் நாம் ஆழப்பட இந்த நாளில் நம்மை அழைக்கிறார். வார்த்தைகளில் நாம் ஊன்றி இருக்கும் போது நமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் ஆண்டவரின் மகத்துவமான கரங்களிலிருந்து வரும் . இதைத்தான் நமது வாழ்வில் உணர்ந்து செயல்பட நமது ஆண்டவர் நம்மை இன்று அழைக்கின்றார். மரியா ஆண்டவர் பாதம் அமர்ந்து அவரது வார்த்தையின்படி வாழ அவர் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருந்ததால் மரியா நல்ல பங்கை தேர்ந்தெடுத்துக்கொண்டு விட்டார் என்று ஆண்டவரே கூறுகின்றார். ஆனால் மார்த்தா பற்பல பணிகளில் பரபரபரப்பாக இருக்கின்றார். அவருக்கு ஆண்டவரின் வார்த்தைகளைக் கேட்காமல் பணிகளில் தன்னை ஈடுபடுத்திருக்கிறார். வார்த்தையில் பற்று, அக்கறை இல்லாத தால் மார்த்தா நல்ல பங்கையும் தேர்ந்து கொள்ளவில்லை. அத்துடன் தனது சகோதரியையும் குறையும் கூறுகின்றார். முதலில் ஆண்டவரின் வார்த்தையை அவர்பாதம் அமர்ந்து கேட்டு பின் பணியை தொடங்கி இருந்தால் இருவரும் சேர்ந்து குறை கூறாமல் ஒற்றுமையாக ஆண்டவருக்கு பணி புரிந்து இருப்பார்கள். எனவே தினமும் ஆண்டவர் திருப்பாதம் அமர்ந்து அதனால் கிடைக்கும் இறை வல்லமையுடன் பணிவாழ்வில் தொடர்ந்து செல்ல வரம் கேட்போம்.